ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கிலவருஷ ஆடி மீ பகுதி எ.
Vol 6. *July & August 1929.* No. 7.

பன்மணித்திரள்.

எந்தம்மை விற்கவும் பெறுவார்கள்,

ஆத்மாவுக்கு முக்யமான லக்ஷணம் எம்பெருமானுக்கடிமையா யிருப்பதாம். இவ்வடிமைத்திறம் பூர்த்திபெறவேண்டுமேல் அவனடியாரளவிலும் அடிமையாயிருத்தல்வேண்டும். திருவஷ்டாக்ஷரத்தில் நமப்பதத்தின் அர்த்தபலத்தாலே பாகவதசேஷத்வம் சொல்லப் பட்டுளது. "இதிலே பாகவதசேஷத்வமும் அநுஸந்தேயம்" என்று லோகதேசிகன் அருளிச்செய்ததாலு மறியலாம். திருமங்கைமன்னனும்,

"மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோடு
உற்றிலேன்உற்றதுமுன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம்பேசிலும்நின்திருவெட்டெழுத்தும்
கற்றுநான்கண்ணபுரத்துறையம்மானே"

என்று திருவஷ்டாக்ஷரத்திற்குப் பலபொருள்களிருந்தாலும் முக்யப் பொருள் அவனடியார்க் கடிமையாயிருப்பதாம், அருளிச் செய்தார். இங்ஙனம் அவர்கட்கு அடிமையாயிருப்பதும் கிரய விக்கிரயங்கட்கு யோக்யமாம்படி யிருத்தல்வேண்டு மென்பதைப் பெரியாழ்வார்,

"காசின்வாய்க்கரம்விற்கிலும்கரவாதுமாற்றிலிசோறிட்டுத்
தேசவார்த்தைபடைக்கும்வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர்
கேசவாபுருடோத்தமாகிளர்சோதியாய்குறளாவென்று
பேசுவாரடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே"

என்று அருளிச்செய்தார். இதனால் பாகவதர்கள் இஷ்டப்படி காரியங்கொள்ளும்படி விதேயனாயிருத்தல்வேண்டுமென்பது பெறப்பட்டது. இனி, இதற்கு இங்கோர் ஐதிஹ்யமுரைக்கப்பெறும். அதுவருமாறு:—

உடையவர் திருமலைக்கெழுந்தருளி, திருவேங்கடமுடையானை மங்களாசாசனஞ்செய்து, பின்னர் பெரியதிருமலைநம்பிகளிடத்தில் ஸ்ரீராமாயண காலக்ஷேபங்கேட்டு அவரிடத்தில் விடைபெற்றுத் திருவரங்கஞ் செல்வதற்கு எத்தனித்தனர். அப்பொழுது பெரிய திருமலைநம்பி 'இத்துணைத் தூரம் எழுந்தருளின உமக்கு நாம் ஒன்றுந்தரப்பெற்றிலோம்' என்றருளிச்செய்தார். அதுகேட்ட உடையவர் 'அப்படித் தந்தருளத் திருவுள்ளமிருக்குமாகில் கோவிந்தப் பெருமாளை அடியேனுக்குத் தந்தருளவேண்டும்' என்று விண்ணப்பித்தார். பெரியதிருமலைநம்பி 'அப்படியே தருகிறோம்' என்று கிரய விக்ரயங்கட்கு யோக்யமாயிருக்கிற கோவிந்தப்பெருமாளை உடையவருக்கு * உதகபூர்வகமாகத் தானஞ்செய்து கொடுத்து கோவிந்தப் பெருமாளைப்பார்த்து 'நீர் நம்மிடத்தில் எவ்வளவு அன்பு செலுத்தினீரோ அதுபோல உடையவரிடத்திலும் அன்பு வைக்கக்கடவீர்; என்று விடை கொடுத்தார்.

உடையவரும் பெரியதிருமலைநம்பிகள் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்துக் கோவிந்தப்பெருமாளை அழைத்துக்கொண்டு சோழ சிம்மபுரம், திருப்புட்குழி முதலிய திவ்யதேசங்களை ஸேவித்துவிட்டுப் பெருமாள்கோவில் (காஞ்சீபுரம்) வந்து அங்குள்ள திருக்கச்சிநம்பிகள் மடத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது கோவிந்தப்பெருமாள் பெரியதிருமலைநம்பிகளைவிட்டுப்பிரிந்த பிரிவாற்றாமையினால் உடல்வெளுத்துத் துன்புற்ற முகத்துடனிருந்தார். உடையவர் இவரது கருத்தைக் குறிப்பாலறிந்து 'கோவிந்தப்பெருமாளே! நீர் திருமலைநம்பியை ஸேவித்து வரக்கடவீர்' என்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் அவருக்குத் துணையாக அனுப்பினார்.

* உதகம்—நீர்.

கோவிந்தப்பெருமாளும் திருமலைக்கெழுந்தருளி திருமலைநம்பிகள் திருமாளிகை வாசலில் நின்றார். அங்குள்ளவர்கள் உள்ளே சென்று நம்பிகளைநோக்கி கோவிந்தப்பெருமாள் வந்திருக்கின்றார் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அவர்கள் கூறியதைக்கேட்ட நம்பிகள் 'பேயனைப்போகச்சொல்வீர்' என்றார். இதைக்கேட்ட திருமலைநம்பிகளின் தேவிகள் 'இத்துணைத் தூரம் இளைத்து எழுந்தருளின இவர்க்குத் தேவரீர் ஸேவையும் ஸ்ரீபாததீர்த்தமும் தளிகைப் பிரஸாதமும் ப்ரஸாதித்து இரங்கியருளவேண்டாவோ' என்று விண்ணப்பிக்க நம்பியும் நாம் "விற்றபசுவுக்குப் புல்லிடுவதில்லை" என்று கோவிந்தப்பெருமாளை ஆதரிக்காமல் நீக்கிவிட்டார்.

பின்னர் கோவிந்தப்பெருமாளும் திருமலைநம்பிகளிடத்தில் ஆசையற்று 'இனி நமக்கு உடையவர் திருவடிகளே தஞ்சம்' என்று கருதித் தம்முடன் வந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் அழைத்துக்கொண்டு பெருமாள்கோவில் வந்து மிகுந்த ஆவலுடன் உடையவர் திருவடிகளைச்சேவித்து நின்றார். அப்பொழுது உடையவர் கோவிந்தப்பெருமாளுக்குத் துணையாகச் சென்ற இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் மூலமாகத் திருமலையில் நிகழ்ந்த விருத்தாந்தங்களைக் கேட்டுத் திருமலைநம்பிகளின் குணவிசேஷத்தைக் கொண்டாடினார்.

இவ்விருத்தாந்தத்தால் கோவிந்தப்பெருமாள் திருமலைநம்பிக்கு "எந்தம்மைவிற்கவும் பெறுவார்களே" என்று பெரியாழ்வார் அருளிச்செய்ததற்கு லக்ஷ்யமாக அசேதனப்பொருள்போலக் கிரயவிக்ரயங்கட்கு யோக்யமாயிருந்தமை யறியலாம்.

ஈசுவரனுக்கு மூன்றுபத்து வந்து கழிந்தது.

என்பது எம்பாரருளிச்செய்த வார்த்தை. ஆபத்தாவது உயிருக்கு நேரும் சங்கடம். உலகிலுள்ள ஜனங்கள் * தாபத்ரயத்திலகப்பட்டு ஆபத்தடைகின்றதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஸர்வேசுவரன் இருவினைப்பற்றற்ற ஆனந்தமயனாகிய அறப்பெரியானாத

* தாபத்ரயம்—மூவகைத்துன்பம். அவையாவன: தன்னால் வருவது, தெய்வத்தால் வருவது, பிறிதொன்றால் வருவது என்பன.

லால் அவனுக்கு எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஒருசிறிதும் ஆபத்தில்லை யென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். இத்தகைமையுடையவனுக்கும் சிலகாலவிசேஷத்தில் மூன்றாபத்துகள் தோன்றின. அவையாவன:— ஹிரண்யன் தன் புதல்வனாகிய ப்ரஹ்லாதனைக் கோபித்து 'நீ சொல்கிற ஹரி யென்பவன் எங்கே இருக்கிறான்' என்று கேட்டகாலத்து ப்ரஹ்லாதன் "சாணிலுமுளனோர் தன்மையணுவினைச் சதகூறிட்ட, கோணினுமுளன் மாமேருக்குன்றினுமுளனிந்நின்ற, தூணினுமுளன் முன்சொன்ன சொல்லினுமுளனித்தன்மை காணுதிவிரைவினென்றான்..." என்று பிரதிஜ்ஞை செய்தகாலம் ஒன்று. கஜேந்திராழ்வான் முதலையின் வாயிலகப்பட்டு உயிர்விடுகிற தருவாயில் 'உலகிற்கு மூலப்பொருள் எதுவோ அது என்னை இப்பொழுது காத்திடுக' என்று ஓலமிட்டகாலம் மற்றொன்றும். துரோணர் பீஷ்மர் முதலிய மதிவாணரும், பஞ்சபாண்டவரும், துரியோதனாதியரும், மற்றுமுள்ள அரசரும் கூடிய ஸபையில் துச்சாசனன் திரௌபதியை மானபங்கஞ்செய்தகாலத்து அவள் "𑌶𑌂𑌖𑌚𑌕𑍍𑌰𑌗𑌦𑌾𑌪𑌾𑌣𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌾 𑌨𑌿𑌲𑌯𑌾𑌚𑍍𑌯𑍁𑌤, 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷 𑌰𑌕𑍍𑌷𑌮𑌾𑌂 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌾𑌂" "சங்கசக்ரகதாபாணே த்வாரகா நிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம்" என்று சரணாகதிசெய்தகாலம் பிறிதொன்றும்.

இந்த மூன்று காலங்களில் † ஸர்வாந்தர்யமித்வம், ஸர்வஜகத்காரணத்வம், § ஆபத்ஹரத்வம் என்ற எம்பெருமானுக்குரிய மூன்று தர்மங்கட்கு அழிவு நேராவண்ணம் இங்குக் குறிப்பிடப்பெற்ற மூன்றாபத்துக்களாம். ப்ரஹ்லாதன் செய்த பிரதிஜ்ஞையின்படி ஹிரண்யனறைந்த தூணிடை நரசிம்மரூபியாய்த் தோன்றினானாதலால் ஸர்வாந்தர்யமித்வம் என்ற தர்மம் நிலைநின்றது. மூலமே! என்றோலமிட்ட கஜேந்திராழ்வானை முதலையின் வாயினின்று ரக்ஷித்தானாதலால் ஜகத்காரணத்வம் என்ற தர்மம் அழியாது நிலைபெற்றது. திரௌபதியைக் கொடிய ஆபத்தினின்றும் ரக்ஷிப்பதற்கு

---

† ஸர்வாந்தர்யமித்வம்—எல்லாப்பொருள்களின் உள்ளேயிருந்து நியமிக்குந்தன்மை.

§ ஆபத்ஹரத்வம்—ஆபத்துக்களை அகற்றும் தன்மை.

வஸ்திரப் பிரதானஞ்செய்தானுதலால் ஆபத்ஹரத்வம் என்ற தர்மம் நிலைநின்றது.

உலகில் ஸம்ஸாரிகள் ஸவர்க்கமில்லை; நரகமில்லை; மோக்ஷமில்லை; தெய்வமில்லை என்று * விதண்டாவாதம் செய்துவருகிற சந்தர்ப்பத்தில் ப்ரஹ்லாதாழ்வானுக்கும், கஜேந்திராழ்வானுக்கும், திரௌபதிக்கும் ஸர்வேசுவரன் உதவிபுரியாதிருப்பானேல் அவர்கள் 'ஈசுவரதத்வமேயில்லை' என்று சாசனஞ் செய்துவிடுவார்கள். இவர்கள் இங்ஙனம் சாசனஞ்செய்யாதிருக்க ஸர்வேசுவரன் மூன்று சந்தர்ப்பங்களிலும் உதவிபுரிந்து காத்துக்கொண்டான். இதனால் எம்பார் 'ஈசுவரனுக்கு மூன்றுபத்து வந்து கழிந்தது' என்று அருளிச்செய்தார். உலகிலுள்ள அஜ்ஞர்கள் ஸர்வேசுவரனாகிய தன்னை இல்லை என்று நிலைநிறுத்தும் ஸந்தர்ப்பங்களுண்டாக எம்பெருமான் அவற்றையும் பரிகரித்துக்கொண்டானென்பது இதன் கருத்தாம். இவ்வாறன்றி இருவினைத்தளையிற் சுட்டுண்டிருக்கிற நமக்குண்டாகும் ஆபத்துகள்போல எம்பெருமானுக்கு ஆபத்துகள் உண்டாயினவென்று கொள்ளலாகாது.

ஸ்ரீ வைஷ்ணவர்கட்குரிய முக்ய குணங்கள்.

விஷ்ணுவின் சம்பந்தமுடையார் வைஷ்ணவராவார். எங்கும் வியாபித்திருப்பவன் விஷ்ணுவாவான். இவன் வியாப்தியில்லாதவிடம் ஒன்றுமில்லையாதலால் எல்லாப்பொருளும் இவன் ஸம்பந்தமுடையனவென்பது பெறப்படும். ஆயினும் எந்தச் சம்பந்தப் பொருள்கட்கு அவன் விஷயமான சம்பந்தஜ்ஞாநமிருக்குமோ அவைகளே வைஷ்ணவப்பொருள்களாகுமென்று கொண்டுகொள்ளத்தக்கது. இதனால் அசேதனப்பொருள்கட்கு அவன் சம்பந்தமிருந்தாலும் அவன் விஷயமான சம்பந்தஜ்ஞாநமில்லையென்பது முடி

---

* விதண்டாவாதம்—தன் கோட்பாட்டை நிலைநிறுத்தாத வாதம்.

வாதலால் சேதன (அறிவுடை)ப் பொருள்கட்கே அவன் விஷயமான சம்பந்த வுணர்ச்சியுண்டாகுமென்று அறியத்தக்கது. இவ்வுணர்ச்சியுடைய அறிவுடைப்பொருள்கள் பலவற்றுள்ளும் விஷ்ணுத்வேஷமுடைய சிலர்கட்கு இந்தச் சம்பந்த ஜ்ஞாநமுண்டாவதில்லை. ஒரு சிலர்க்கே உண்டாகக் காண்கிறோம். இங்ஙனமுண்டாகப்பெற்ற இவர்களே வைஷ்ணவர்களாவார்.

இவர்கட்கு முக்யமாகவிருக்கவேண்டிய குணங்கள் இரண்டாம். அவையாவன:— பிறர் துக்கங்கண்டவிடத்து இரங்குகிற தயையும், எல்லோரும் நன்றாக வாழ்வதே தனக்குப் பிரயோஜனமாகக் கொள்ளுதலுமாம். எம்பெருமான் எல்லாம் நன்கு வாழவேண்டுமென்று நிர்ஹேதுககிருபையால் உலகை சிருஷ்டிக்கின்றானாதலால் அவனிடத்தில் இந்த இரண்டு குணங்கள் முக்யமாக விளங்குகின்றன. இதனால் அவன் சம்பந்த ஜ்ஞானமுடையார்க்கும் இவையின்றியமையாதனவாகுமென்பது விளங்கும். இந்த இரண்டு குணங்களை முக்யமாகவுடையவர் எவரோ அவர் தெளிவிசும்பாகிய திருநாட்டில் நிலைபெறத்தக்கவரென்று நிச்சயமாயறியலாமென்று நம் பூர்வாசார்யர்கள் பலவிடங்களிலும் அருளிச்செய்துள்ளார்கள். மேலும் இதற்கு ஒரு ஐதிஹ்யமும் இங்குரைக்கப்பெறும். அதுவருமாறு:—

பிள்ளை திருவழுதிவளநாட்டரையர் தம் அந்திமதசையில் மிகவும் துக்கமுற்றிருந்தார். அருகிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவரை ஒருவர் முகத்தைப் பார்த்துக்கொண்டு 'பெரியார் சரமதசையில் இந்தக்கொடிய விரோதியாகிய சரீரம் ஒழியப்பெற்றதே' என்று சந்தோஷமுடையவராயிருப்பாரன்றோ! அங்ஙனமிருக்க இவர் இந்தச் சந்தர்ப்பத்தில் துக்கிக்கின்றனரே என்று கருதினார்கள். இவர்கள் கருத்தறிந்த பிள்ளை திருவழுதிவளநாட்டரையர் அவர்களைப்பார்த்து நீங்கள், இந்த விரோதியாகிய சரீரத்தைவிடுவதற்கு யான் வருந்துவதாகக் கருதுகிறீர்கள்; அதற்காகத் துக்கிக்கின்றேனல்லேன்; சம்சாரிகள் இழவுக்காக வருந்தினேன்; சம்சாரிகட்கும் நமக்குஞ் சிறிதுமாத்திரமே வாசியுள்ளது; எவையெனின்; "நாம் இடுவது

ஒரு தண்டம்; பண்ணுவது ஒரு *ப்ரபத்தி; இழப்பது ஒரு † ஹேயமான ஸம்ஸாரம்; பெறுவது ஒரு விலக்ஷணமான பரம பதம்; இதை யறியாதே பாபத்தைச்செய்து நரகில் விழுந்தழுந்து கின்றனரே; அந்தோ!" என்று துக்கிக்கிறேனேயன்றி வேறில்லை என்று அருளிச்செய்தார். 'இதைக்கேட்ட ஸ்ரீ வைஷ்ணவர்கள் 'அந்தோ! இவரது பெருமை யறியாது நாம் வேறுவகையாகக் கருதிவிட்டோமே' என்று மனம் வருத்தமுற்று இந்தப் பெரியாரிடத்தில் சரமதசையிலும் தம்முடைய பேற்றில் சிறிதும் விருப்பமின்றிப் § பரஸம்ருத்தியைக ப்ரயோஜனத்வம் ¶ பரதுக்காஸஹிஷ்ணுத்வம் என்ற குணவிசேஷங்கள் பிரகாசிக்கக் கண்டோமன்றோ! என்று மகிழ்வுற்றார்கள்.

இதனால் வைஷ்ணவர்கட்கு இந்த இரண்டு குணங்களும் அவசியமாகவிருத்தல் வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

---

* ப்ரபத்தியாவது விடுவதெல்லாம்விட்டுத் தன்னையும் விடுவதாமென்று பூர்வாசார்யர்கள் அருளிச்செய்தார்கள். கண்ணன் அர்ஜுனனை நோக்கித் தன்னைத் தொட்டுக்காட்டி நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டா; எல்லாவற்றையும் விட்டு என்னையே உபாயமாகப்பற்று என்று அருளிச்செய்ததே ப்ரபத்தியாகும்.

† ஹேயம்—அற்பம். ஸம்ஸாரம்—ஜனனமரணாதிகளில் உழன்று திரிவது.

§ பரஸம்ருத்தியைக ப்ரயோஜனத்வம்—பிறர் செழிப்புற்று வாழ்வதே தனக்குப் பிரயோஜனமாகக் கொள்தல்.

¶ பரதுக்காஸஹிஷ்ணுத்வம்—பிறர் துக்கங்கண்டு ஸஹியாமை.

ஸ்ரீ:

மதத்ரய உபந்யாஸம்.

[ஸ்ரீ கோயில் கந்தாடை ஸ்ரீ. உ. வே. வித்வான் வாதூலதேசிக கந்தாடை அப்பன்ஸ்வாமி எழுதுவது.]

த்வைதமதம்.

ஸ்ரீ𑌮𑌨𑍍𑌮𑌧𑍍𑌵𑌮𑌤𑍇 𑌹𑌰𑌿𑌃 𑌪𑌰𑌤𑌰𑌃 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑌗𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌤𑍋
𑌭𑍇𑌦𑍋 𑌜𑍀𑌵𑌗𑌣𑌾 𑌹𑌰𑍇𑌰𑌨𑍁𑌚𑌰𑌾 𑌨𑍀𑌚𑍋𑌚𑍍𑌚𑌭𑌾𑌵𑌂𑌗𑌤𑌾𑌃 ।
𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑍈𑌜 𑌸𑍁𑌖𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿 𑌰𑌮𑌲𑌾𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑍍𑌚𑌤𑌤𑍍𑌸𑌾𑌧𑌨𑌂
𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑌖𑌿𑌲𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑍈𑌕𑌵𑍇𑌦𑍍𑌯𑍋 𑌹𑌰𑌿𑌃 ॥

இவ்வுலகில் உண்டானவர்களான யாவரும் தத்தம் மதங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாததாகும். இவ்வாறு தெரிந்துகொள்ளாத காரணத்தினலன்றே மதாந்தஸ்தரின் கொள்கையைப் புகழ்தல், அதை யநுஸரித்தல், தம்மநுஷ்டானங்களைத் தவிர்தல் முதலியன தோன்றுகின்றன. இதனல் தத்தம் நிலையைக் காப்பாற்றுதற்காகப் பிறசமயங்களை அவசிய முணரவேண்டுமென்பது பெறப்பட்டது. "𑌯𑌾𑌵𑌤𑍍𑌪𑌰𑌮𑌤𑌂 𑌨𑌿𑌰𑌾𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌤𑌾𑌵𑌤𑍍𑌸𑍍𑌵𑌮𑌤 𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌂" "யாவத்பரமதம் நிராக்ரியதே தாவத் ஸ்வமத மப்ரதிஷ்டிதம்" என்ற நியமமும் இதை வலியுறுத்தும்.

நம்தேசத்தில் பதினெண்சமயங்களை மேற்கொண்டவர் விளங்குகின்றனர். அவர்களாவார் சார்வாகன், ஜைனன், பௌத்தன், வைபாஷிகன், ஸௌத்ராந்திகன், யோகாசாரன், மாத்யமிகன், நையாயிகன், வைசேஷிகன், பாசுபதன், ஸாங்க்யன், யோகிகள், பாட்டன், ப்ராபாகரன், மாயாவாதி, (அத்வைதி) பாஸ்கரன், யாதவன், த்வைதி, (ஏகாயனன்) மிதுநாயனன், (விசிஷ்டாத்வைதி) என்பவராம்.

இவர்களில் சார்வாகன் முதலாக யோகிபர்யந்தமாகவுள்ள பதினெரு மதஸ்தவர்கள் வேதத்திற்குப் புறம்பானவர்கள். மற்ற

எழுவர் வைதிகர். அந்த வேதபாஹ்யர் பதினொருவருள் சில மதஸ்தர் இல்லாதிருக்கின்றார்கள். சிலர் சிற்சிலவிடங்களில் அருமையாயிருக்கிறார்கள். இவர்கள் வேதத்தை ஒப்புக்கொள்ளாமல் தத்தம் யுக்தியால் வாதிக்கிற மதவாதியராதலால் இவர்கள் * "தர்க்கா ப்ரதிஷ்டாநாத்" "தர்க்கா ப்ரதிஷ்டாநாத்" என்று ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்வரூபியான ஸ்ரீ வ்யாஸபகவான் அருளிச்செய்தபடி ஆதரிக்கத் தக்கவராகார். ஆதலால் இங்கு இவர்களை ஆராய்வது ஆவசியகமில்லை.

ஒரு சமுதாயஸ்தரில் ஒருவன் மற்றொரு விரோதி ஸமுதாயஸ்தரில் கலந்து வேஷதாரியாய் விஷமம் செய்வானேல் இவனை முன்னதாகக் கண்டிக்கவேண்டியது முக்ய கடமையாகும். இப்படி வைதிகரென்று வேஷம் பூண்டு அவைதிகமதத்தையே வேறு வகையாக உபந்யஸித்துவரும் பாட்டன் முதலாக ஏகாயனனென்னும் த்வைதியளவாகவுள்ள ஆறு மதத்தினரை வெல்வதற்கு முன்னம் அந்த மதங்களின் கொள்கையை நிரசனீயதயா (களையவேண்டுமென்ற கொள்கையோடு) அறியவேண்டும். மற்ற மதங்கள் வேதங்கட்குப் புறம்பானவைகளென்று நிரஸித்து (அழித்து) விடலாமன்றோ! இந்த ஆறு வைதிகசமயத்தினருள் பாட்டன், ப்ரபாகரன் என்ற இருவரும் இல்லாமையினாலும், பாஸ்கர, யாதவ மதங்கள் சங்கரமதத்திலடங்கினமையாலும், எஞ்சிநின்றவை த்வைதம் அத்வைதம் என்ற இரண்டேயாகும்.

இந்த இரண்டு மதங்களுள் முதலில் த்வைதமதத்தை இயன்றவரை உபந்யஸிப்போம். த்வைதி, ஏகாயனன், பேதவாதி என்று இவர்களை வழங்குவர். இப்பெயர்களும் காரணப்பெயர்களாகும். "த்வயோர்பாவ:, த்விதா, த்வைதம்" "த்வயோர்பாவ:,

* ஒருவன் வேதாந்தத்தைவிட்டுத் தன் யுக்தியினால் ஒன்றைச்சொல்லில் இவனைக்காட்டிலும் புத்திமான் ஒருவன் பிறந்து இதைத் தூஷிக்கலாம். அதையும் மற்றொரு புத்திமான் தூஷிக்கலாம். இப்படி ஸித்தாந்தம் ஓரிடத்தில் நில்லாமலே போய்விடும். ஆதலால் யுக்தியையே முக்யமாகக்கொண்ட மதங்கள் அப்ரதிஷ்டித தோஷதுஷ்டங்களாம். (நிலைநில்லாமை என்ற தோஷத்துடன் கூடின) என்பது இந்த ஸூத்ரத்தின் பொருளாம்.

த்விதா, த்விதைவத்வைதம்" என்ற வ்யுத்பத்தியால் பலித்த வர்த்தம் பேதம் என்பதாம். இதுவே முக்யமான இவர்கள் கொள்கை. "ஏக ஏவ அயநம் ப்ராப்யம் ஏஷாம்" என்ற வ்யுத்பத்தியால் கேவல ப்ரம்மசாரிநாராயணனே ப்ராப்யம் என்று கொள்வார்களாதலால் இவர்கள் ஏகாயனன் என்று வழங்கப்படுவார்கள். பேதத்தைப்பற்றி தெரிவிக்கின்ற வேதங்களை ப்ராதனம்ாகக்கொண்டு அபேதசுருதிகட்குக் கௌணத்வம் சொல்லுகின்றனராதலால் பேதவாதியர் என்று பெயர் பெற்றனர்.

இம்மதத்தில் "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" இத்யாதி சுருதியின்படி கீதாபாஷ்யத்தில் ஆநந்ததீர்த்தியத்தில் "[illegible]" "[illegible]" என்ற சுலோகத்தின் ஜயதேவ வியாக்யானத்தில் "[illegible]" என்று விரித்தமையால் ஸமஸ்த கல்யாண குணாத்மகனும் ஸர்வசக்தியுக்தனும் ஹேயப்ரதிபடனும், ஸ்ரீயுக்த நாராயணனே பரமான தத்வம். இதற்கு ப்ரமாணம் ப்ரத்யக்ஷாநுமானாகமங்கள். இந்த ஜகத் ஸத்யம். அதுவும் பகவத் ஸம்பந்தியே. ஜகத் பிர்ம்மங்கட்குப் பேதமேயுள்ளது. இதற்குப் பிரமாணம் "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" "[illegible]" இவை முதலான ப்ரமாணங்களால் ஜீவாத்மாக்கள் நித்யராய், ஜ்ஞாநாநந்தஸ்வரூபிகளாய், ஜ்ஞாநகுணகராய் ஈசுவராதீனராய், பஹுவாகவிருப்பர்கள். ஜகந்நிமித்தகாரணம் ஈசுவரன். உபாதான காரணம் ப்ரக்ருதி சதுவிம்சதி (இருபத்தி நான்கு) தத்வங்கள். ஸஹகாரிகாரணம், காலம் அதிருஷ்டாதிகள். இவர்கள் பேதவாதிகளாதலால் த்ரிவிதகாரணமும் ஈசுவரனென்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

"தத்வமஸி" "ப்ரஹ்மைவபவதி" "நேஹநாநாஸ்தி கிஞ்சந" இத்யாதி அபேதசுருதிகளுக்குக் கெதி கௌணமென்பதே இவர்கள் ஸித்தாந்தம். அஃதாவது இவர் அபேதசுருதிகளை முக்யமாகக்கொள்வதில்லை என்பதாம். "அக்நிர்மாணவ:" என்கிற ஸ்தலத்தில் பிர்ம்மசாரிக்கு ஸாதுருசியம் குணநிபந்தமாய் அக்நி ஸாதுருசியம் சொல்வதுபோல ஜகத் பிர்ம்மங்கட்கு ஸமாநாதிகரண்யமும் ஸாரூப்யாதி குணநிபந்தனம். அதில் ப்ரமாணம் பேதசுருதிகளும் பேதப்ரத்யக்ஷமும், "ஸம்வதீரோயெந ஏகஸ்மின் ஸம்யுதே" என்கிற நியாயத்தாலும், "யதாநத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே" என்கிற மேல்வாரியாய் ஐக்யபோதக சுருதிமூலக பேதாநுமானமும். இந்த சுருதிக்கு ஆபாத: (போலித்தோற்றமாக) தோன்றுகிற அர்த்தம்:— ஸமுத்திரத்தில நதீஜலம் ப்ரவஹிக்கில் ஏகிபவிப்பதுபோல் இந்த ஜகத்தும் பிர்ம்மத்தினிடத்தில் ஏகிபவிப்பதுபோல் தோன்றுகிறது. விசாரித்துப் பார்த்தால் ஸமுத்திர ஜலம் பெருக்கில் ஜல பேதாநுமானம் காணுகின்றோம். ஆகையால் அபேதசுருதிகௌணமிறே.

இம்மதத்தில் புருஷார்த்தம் மோக்ஷம். அஃதாவது.— ஸ்தான விசேஷத்தில் பிர்மத்தையடைவதால் ஆத்மாக்களுக்குண்டான ஸ்வரூபசுகமே. நாம் அதை 'கேவலன்' என்று வழங்குவோம். முக்தி தெசையில் ஜீவராசிகளுக்கு ஸ்வரூபசுகத்தில் பரஸ்பரபேதமுண்டு. அஃதாவது.— யாதொரு ஜீவன் முக்திபெறுங்காலத்தில் எந்தச் சரீரத்தோடிருந்தானோ அந்தச் சரீரத்திற்குச் சமானமான அப்ராக்ருத சரீரியாய் தததநுகுணமான ஸ்வரூபசுகமே அநுபவிக்கிறானென்பதாம். இந்தப் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனம் ஸர்வ சக்தஞ்ன நாராயண விஷயமான பக்தி. உபாஸநாரூபமான இடைவிடாமலிருப்பதுமான ஸ்மிருதி ஸந்ததி.

தொடரும்.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்கிருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ
V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(146-ம் பக்கத்தொடர்ச்சி.)

இளமைப் பருவம்.

ஸ்ரீ கிருஷ்ணனைக்குறித்து நம்ப முடியாத அநேக கதைகள் புராணங்களில் கூறியுள்ளன.

1. பூதனை வதம். பூதனை கம்சனால் அனுப்பப்பட்ட ராக்ஷஸி. அவள் மிகவும் அழகிய உருக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனைக் கொல்வதற்காக நந்தன் வீட்டிற்குச் சென்றாள். தனது ஸ்தனங்களில் விஷத்தைத் தடவிக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனை வாரியெடுத்து பாலூட்டினாள். ஸ்தன்யபானம் செய்யுங்கால் ஸ்ரீ கிருஷ்ணன் அவளுடைய பிராணனையுஞ்சேர்த்து உறிஞ்சினான். அவள் தனது நிஜரூபத்துடன் பூமியில் வீழ்ந்தாள். அவ்வுருவம் 6 க்ரோசம் நீளமாயிருந்தது.

மகாபாரதம் சிசுபாலவத பர்வாத்யாயத்தில் பூதனாவதத்தைப் பற்றிக் குறித்திருக்கிறது. சிசுபாலன் பூதனையை சகுனி யென்று கூறியுள்ளான். சகுனி யென்றால் கழுகு, பருந்து, அல்லது ஓர் கறுத்த பறவையைக்குறிக்கும். ஒரு பலமுள்ள குழந்தை சகுனியைக்கொல்வது சம்பவமல்ல.

புராணக்கதைக்கும் இன்னமோர் அர்த்தமுளது: அரைக் குழந்தைக்கு ஒருவிதநோய் வருவதுண்டு அந்த நோயின் பெயர் பூதனை. குழந்தை பலமாக ஸ்தன்யபானம்செய்தால் அந்நோய் நீங்குமென்பது யாவரும் அறிந்த விஷயம். இதே பூதனாவதமென்று கொள்ளக்கூடும்.

2. சகடவிபர்யயம். அசோதை ஓர் நாள் ஸ்ரீ கிருஷ்ணனை ஓர் வண்டியின் அடியில்விட்டுவைத்திருந்தாள். ஸ்ரீ கிருஷ்ணனின்

கால் உதையால் வண்டி பிறண்டு அப்பால் விழுந்தது. இருக்வேதஸம் ஹிதையில் இந்திரனால் சொல்லப்பட்ட ஒரு கதை. அஃதாவது.— இந்திரனால் உஷையின் சகடத்தை முறித்தலென்பதாம். இக் கிருஷ்ணனால் செய்த சகடபஞ்சனமே ப்ராசீனசகடபஞ்சனக் கதை யின் புதிய மாறுதலேயாம். வைதிக உபாக்யானங்களில் அநேகங்கள் ஸ்ரீ கிருஷ்ணலீலைகளின் மத்தியில் காணப்படுகின்றன அவைகளைப் பரிசீலனம் செய்வதால் மிக்கபயனுண்டு.

3. பிறகு தாயின்மடியில் ஸ்ரீ கிருஷ்ணன் விசுவரூபமெடுத் தல். குழந்தையின் வாயிலில் அசோதை பிரபஞ்ச முழுமையும் காணுதல். இக்கதையை முதலில் பாகவதத்தில்தான் காண்கின் ரோம். இது பாகவதம் செய்தவரால் கூறப்பட்ட உபந்யாஸமெனத் தோன்றுகிறது.

4. த்ருணுவர்த்தனென்ற பெயர் படைத்த ஒரு அசுரன் குழந்தை ஸ்ரீ கிருஷ்ணனை ஆகாய வழியில் எடுத்துக்கொண்டு போனான் இதனால் த்ருணாவர்த்தமென்பது சுழற்காற்றென புலப்படு கிறது. இப்புராணக்கதைக்கு ஆதாரமொன்றும்காணப்படவில்லை. பல முள்ளதான இக்குழந்தை.சுழற்காற்றிலகப்பட்டுதப்பியிருக்கக்கூடும்.

5. கிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் வெளியில் திரியும் போது கோபிகளின் வீடுகளில்புகுந்து அநேக சேஷ்டைகள்புரிந்து வெண்ணையும் பாலையும் களவாடினரென்று பாகவதத்தில் சொல்லி யிருக்கிறது. இக்கதை விஷ்ணுபுராணத்திலும் பாரதத்திலும் காணவில்லை. ஹரிவம்சத்தில் வெண்ணை தயிர் களவாடிய கதைப் பிரசங்கக்கிரமத்தில் சொல்லியிருக்கிறது. பாகவதத்தில் இக்கதை யின் விஸ்தாரம் காணப்படுகிறது. குழந்தைப் பருவத்தில் தருமம் அறியாக்குழந்தை வெண்ணை தயிர் எடுத்துண்டதால் பிசகென்ன? ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு எவ்வயதிலும் பகுத்தறிவு உண்டென்று சொல்லும்பக்ஷத்தில் கிருஷ்ணோபாசகர்கள் விடையளிக்கிறார்கள்.— ஈசுவரன் செய்தசெயல் களவாமா? இதைக்களவென்று சொல்ல லாமா? ஸர்வ உலகமும் எவருடையதோ பால் தயிர் வெண்ணை நெய் யாவும் எவரால் சிருஷ்டிக்கப்பட்டனவோ அவர் யார் பொருளைக் களவாடினர்? அவருக்குப் பாபம் ஏது?

அவர் மனித தருமத்தைக் கைக்கொண்டதால் மனுஷ்ய தருமத்தில் களவாடுதல் பாபமல்லவோ? என்று வினவினால் இதற்கு இவ்வாறு யாம் விடையளிப்பாம்.— ஒன்று மறியாக்குழந்தை எது காரியம் செய்புமல்லவா? குழந்தைக்குத் தருமம் அதருமம் எனப் பகுத்தறிவு இல்லையே? இக்கதையைப்பற்றி யதிகமாக விஜாரிக்க அவசியமில்லை. இக்கதை நிராதாரமானது; இது ஆதாரமுள்ளதாயினும் பாகவதம் இயற்றினவர் எந்த அபிப்ராயத்தில் இந்தக் கதையைச்சொன்னரோ அந்த அபிப்ராயம் மிகவும் மனோகரமானது.

மேலும், பகவானுனவர் தன் பிரயோஜனத்திற்காகத் திருடவில்லை, ஆகாரமின்றி கூச்சல் போட்டுக்கொண்டிருந்த குரங்குகளுக்காக அவர் திருடி வந்து ஆகாரமளித்தார். கோபிகளிடம் யதேஷ்டமாய் பாலும் வெண்ணெயும் இருந்தன. குரங்குகளைப் பசியமர்த்தும் பொருட்டு கொஞ்சம் திருடினர் என்பதில் தோஷமென்ன? ஸ்ரீ கிருஷ்ணர் எல்லாப் பிராணிகளிடமும் ஸமதிருஷ்டியுள்ளவர். எல்லாப்பிராணிகளுக்கும் ஈசுவரர். இக்கதைக்கு பாகவதத்தைத் தவிர பிரமாணம் வேறு ஒன்றும் இலது. ஆனல் இதிலிருந்து நாமொன்று தெரிந்துகொள்கிறோம். பிறருக்கு இதஞ்செய்வதே கிருஷ்ணனின் நோக்கமென்றும் ஜன்ம விரதமென்றும் தெளிவாய்த் தெரிகிறது.

"யமலார்ஜுன பங்கம்"

ஒரு சமயத்தில் கிருஷ்ணன் அதிகமாய்த் துஷ்டத்தனஞ்செய்தானென்று யசோதை அவனிடுப்பில் கயிற்றைக்கட்டி ஒரு உரலில் சுற்றிவைத்திருந்தாள். கிருஷ்ணன் உரலையும் இழுத்துக்கொணடு போய் 'யமலார்ஜுனர்' என்று பெயர்வாய்ந்த இரண்டு மரங்களின் நடுவில் நுழைந்து சென்றான். அம்மரங்களின் அடிபாகத்தில் உரல் சிக்கிக்கொண்டது. கிருஷ்ணன் பலமாயிழுத்ததால் மரங்கள் முறிந்துவிழுந்தன. இக்கதை, விஷ்ணுபுராணத்திலும் மஹாபாரதத்தில் சிசுபாலனின் அவதூறு வாக்கியத்திலும் காணப்படுகிறது. பலவானன குழந்தை இம்மரங்களை முறியச்செய்தது என்பது பொருந்தும்.

ஆனால் பாகவதக்காரர் மேற்கூறிய உண்மையின்பேரில் அதி ரஞ்சனமான கதையைச் சேர்த்திருக்கிறார். இம்மரங்கள் முதலில் குபேரனுடைய பிள்ளைகள். அவர்களின் பாபத்தால் மரமானார்கள். ஸ்ரீ கிருஷ்ணனின் ஸ்பர்சத்தால் முக்தியடைந்து தம்மிருப்பிடம் சென்றார்கள் என்று சேர்த்திருக்கிறார்.

விஷ்ணுவுக்கு தாமோதரனென்று ஒருபெயர். (பஹிரிந்த்ரிய) பஹிரிந்திரிய நிக்கிரகத்தைத் தமமென்று சொல்லுவதுண்டு. உதா- உத்கிருஷ்டகதி (உதரம் தமேந) தமமூலமாக எவன் உயர்ந்த பதவியையடையச் செய்கிறானோ அவனே தாமோதரன். விஷ்ணு வானவர் தபஸ்செய்து விஷ்ணுபதவியைப் பெற்றார் என்று வேதத்தில் கூறப்பட்டுளது. ஸ்ரீசங்கராசார்யர் தாமோதர சப்தத்திற்கு இவ்விதமே வியாக்யானஞ் செய்கிறார். (தமாதிஸாதநேந உதரா உத்க்ருஷ்டா கதி: யா தயா கம்யதே இதி தாமோதர:) தாமாத்தாமோதரம் விது: என்றும் மகாபாரதமும் கூறுகிறது.

ஆனால் தாமமென்கிற சப்தத்தால் மாடுகட்டுகிற கயிறு குறிப்பிடப்படுகிறது. அக்கயிற்றை இடுப்பில் கட்டியபடியினால் பகவானாகிய கிருஷ்ணனுக்கு இப்பெயர் வந்ததென்று பாகவதக்காரர் கூறுகிறார். ஸ்ரீகிருஷ்ணன் கயிற்றால் கட்டுண்டான் என்று கதையேற்படுவதற்கு முன்பாகவே தாமோதரவென்கிற சப்தம் காணப்பட்டிருக்கிறது.

இச்சமயத்தில் நந்தன் முதலான கோபர்கள் பூர்வவாஸஸ்தானத்தைவிட்டு பிருந்தாவனஞ்சென்றார்கள். அவ்விடமிருப்பதால் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு எவ்வளவோ தொந்தரவுகள் நேர்ந்தபடியால் அவைகளிலிருந்து தப்புவதற்காகப் பிருந்தாவனஞ் சென்றார்கள். இவ்விதம் புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. பிருந்தாவனமதிகமான சுகத்தைத் தரக்கூடிய வாசஸ்தலம். ஆகையால் அங்கேயிருத்தல் பொருத்தமானது. இச்சமயத்தில் இடைச்சேரியில் மிருகங்களில் ஓநாய் பயமதிகமாயிருந்தது. ஆகையால் கோபர்கள் அவ்விடத்தை விட்டு வேறிடஞ்சென்றார்கள் என்று ஹரிவம்சங் கூறுகிறது.

(தொடரும்.)

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான்
ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(141-ம் பக்கத் தொடர்ச்சி.)

பின்பு நசிகேதஸ் வைவசுதபட்டினத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது பலவாறு கருதத்தொடங்கினான். அவை யாவன:— ம்ருத்யுவின் (யமனுடைய) வீட்டையடைகிறவர்கட்குள் நாம் முதன்மையாகவாவது நடுவிலாகவாவது செல்லவேண்டும்; கடைசியாகச் செல்லலாகாது; அவன் வீட்டை யடைவதில் நமக்கொரு பயமுமில்லை; ஆனால் யமனுக்கு நாம் ஒன்றுஞ் செய்யவேண்டியதிருக்காதென்று நினைக்க விசனமுண்டாகிறது; யமன் நினைத்தவெல்லாம் அடையக்கூடிய வல்லமையுடையவன்; நம் தகப்பனார் செய்த யாகத்திற்குபகாரிகளாயிருந்த ருத்விக்களுக்கு நம் தகப்பனாரால் கொடுக்கப்பட்ட பசுக்களைக்கொண்டு அவர்கள் எவ்வாறு பலனை யடையாதிருக்கின்றார்களோ அதுபோல தக்ஷிணைப்பொருளாகிய நம்மால் யமனும் ஒரு பிரயோஜனமு மடையாதிருந்தால் நம் தகப்பனாரும் நல்ல பேற்றையடைவதும் ஐயமன்றோ! எவ்வாறுவது நாம் யமனுக்குப் பிரயோஜனப்படவேண்டும்; இப்பொழுது நம் மனமும் இதைத்தான் விரும்புகிறது; என்பனவாம்.

அதன்பின்னர் நசிகேதஸ்ஸுக்கு ஒரு மயக்கமுண்டாக அதனால் அவன் கீழே சாய்ந்தான். சிறிதுநேரம் சென்று விழித்து பார்த்தவுடன் யமனுடைய அரண்மனை வாயிலில் நிற்கக்கண்டான். அங்கு ஒருவரையுங் காணாததினால் வாயிற்றிண்ணையில் ஓர் புறத்தில் உட்கார்ந்தான். அதன்பிறகு வாயிற்காப்பாளர் இவனைக்கண்ணுற்று உள்ளே சென்று சுமதி முதலான மந்திரிகளைப் பார்த்து வாயிற்புறத்தில் ஒரு அதிதி வந்திருக்கிறார் என்று தெரிவித்தனர். சுமதி முதலான மந்திரிமார்கள் இவ்வுரைகேட்டவுடன் அந்த அதிதியை ஸத்கரிக்கவேண்டும் என்ற கருத்தோடு விரைவாக வாயிலை அணுகி

நசிகேதஸ்ஸைப் பார்த்து அதிதியே! உள்ளே வந்து எங்களால் செய்யப்படுகிற ஸத்காரத்தைப் பெற்றுக்கொள்வீராக; என்றனர்.

நசி— நான் உங்கள் எஜமானனுக்குப் பணிவிடைசெய்ய வந்திருக்கின்றேன்; ஆதலால் முன்பு உங்கள் எஜமானை நமஸ்கரிக்க வேண்டும்.

சுமதி—எங்கள் மஹாராஜா ஸத்பலோகஞ் சென்றிருக்கிறார்; அவர் வந்தவுடன் நீர் விரும்பியபடி செய்துகொள்வீர்; அதுவரை உமக்கு வேண்டிய ஸௌகர்யங்களை நாங்கள் செய்கிறோம்.

நசி— எவருக்கும் தம் கருத்து முற்றுப்பெறுதவரை பிறர்செய்கிற எவ்வளவு உபசாரமும் குணமாகத்தோற்றுதன்றோ!

சும— நாங்கள் செய்யுமுபசாரம் உமக்கு குணமாகத்தோற்றுவிட்டாலும் எங்கள் கடமைகளை நீர் ஏற்றுக்கொள்வதற்குரிமையுடையவரன்றோ!

நசி— நீங்கள் கருதுகிறபடி நான் உரிமையுடையவனாயினும் உங்களுடைய எஜமானைக் காணுமளவும் நீங்கள் செய்கிற உபசாரத்தை ஏற்றுக்கொள்ளமாட்டேன்; அதுவரை யான் உபவாசமாகவே இருப்பேன்.

சும— "விருந்துபுறத்ததாத்தானுண்டல் சாவா, மீருந்தெனினும் வேண்டற்பாற்றன்று" என்றபடி விருந்தினர்வாளாவிருக்க உண்ணலாகாதென்பது விதியாதலால் நீவிர் எங்களிருப்பிடம் வந்து உபவாசமாகவிருக்கலாகாது. நாங்கள் கொடுக்கிற உணவை நீர் உண்டு சுகமாகவிருப்பீராக.

நசி— நீங்கள் சொல்வது முறைபாயினும் என் மனம் உட்கொள்ள இசைகிறதில்லை.

சும— எங்களுடைய வேண்டுகோளிற்காவது நீர் இசையவேண்டாமா?

நசி— நான் பிடிவாதஞ் செய்வதாகக் கருதவேண்டா; மனமொப்பாத செயலை எவ்வாறு செய்வது. இனி நான் உங்கள்

மஹாராஜாவின் வரவை எதிர்பார்த்துக்கொண்டு வாயிலிற் காத்துக்கொண்டிருப்பேன்; என்னை நீங்கள் ஒரு தொந்திரவும் செய்யாதிருக்க வேண்டுகிறேன்.

[இங்ஙனமுரைத்த நசிகேதஸ்ஸின் சொல்லைக்கேட்ட சுமதி முதலான மந்திரிமார்கள் நசிகேதஸ்ஸின் வைராக்கிய சித்தத்தைப் புகழ்ந்து வாளாவிருந்தனர்.]

இஃதிங்ஙனமிருக்க; ஸத்யலோகஞ்சென்ற யமதருமன் ஹிரண்ய கர்ப்பரை (பிர்ம்மாவை)ப்பார்த்து மிகவும் உத்ஸாகத்தோடு நமஸ்கரித்தான். பின்பு பிர்ம்மா யமதருமனிடம் * குசலப்ரச்நம் செய்து 'நீர் மிகுந்த கவலை யடைந்திருக்கிறீரென்று நினைத்து உம்மை நான் இங்கு வரவழைத்தேன்; கூடியசீக்கிரத்தில் பூலோகத்தில் அக்கினியின் ஓர் அம்சமானது வாஜச்ரவஸ்ஸின் புத்திரனாக அவதரித்து உமக்கு சிஷ்யனாக வரப்போகிறான்; அவனைக்கொண்டு உமது கவலையை அகற்றிக்கொள்வீர்' என்றார். யமதருமனும் அப்படியே செய்கிறேனென்று அங்கு மூன்று தினங்கள் தங்கியிருந்தான்.

அப்பொழுது பூலோகத்திலிருந்து நாரதபகவான் அங்குவந்து சேர்ந்தார் பிர்ம்மதேவன் நாரதரைப்பார்த்து ஏதேனும் விசேஷமுண்டோ? என்று விசாரித்தார். நாரதர், பிர்ம்மதேவனையும் அவரருகிலிருந்த யமதருமராஜனையும் பார்த்து 'நான் பூலோகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தகாலத்தில் நசிகேதஸ்ஸென்ற ஒரு மஹருஷியின் புதல்வனைச் சந்தித்து நீயார்? என்று வினவினேன்; அவன் 'நான் வாஜச்ரவஸ்ஸின் புதல்வன்; என்னை என் தகப்பனார் யமதருமராஜனுக்கு தக்ஷிணைப்பொருளாகக் கொடுத்துவிட்டாராதலால், நான் வைவசுதபட்டினத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறேன்' என்றான். அப்பொழுது நான் அவனை யோகமஹிமையால் யமபுரத்திற்கனுப்பினேன்' என்றார்.

இதைக்கேட்ட யமதருமன் பிர்ம்மதேவனைப்பார்த்து 'தேவரீர் அருளிச்செய்து முடித்தவுடன் நாரதபகவான் தோன்றியுரை

* குசலப்ரச்நம்—க்ஷேமம் விசாரித்தல்.

செய்ததையுங்கேட்டு என் மனம் ஆனந்த சாகரத்தில் மூழ்கிவிட்டது; இனி, எனக்கு யாதொரு குறைவுமில்லை; பெரியாரையண்டைகொண்டு அவர் அநுக்ரஹம்பெற்ற எவர் தாம் களிப்புறுதிருப்பார்' என்று வியந்து கூறி 'எனக்கு விடையளித்தல்வேண்டும்' என்று வேண்டிநின்றான். பிர்ம்மதேவன் விடையளித்தார்.

அதன்பிறகு யமதருமன் தன் அரமனைவாயிலை நண்ணியபோது அங்குள்ள வயோதிகர்கள் யமதருமனை நோக்கி ஸாக்ஷாத் அக்னியே ஓர் அதிதி ப்ரஹ்மணராக வந்திருக்கிறு; நாங்கள் எவ்வளவோ உபசரித்தும் அந்த உபசாரங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆதலால் நீரே சென்று அவரை உபசரிக்குமுறையில் உபசரித்து சாந்தியடையும்படி செய்வீர்; ஒரு அதிதியானவன் ஒரு க்ருஹத்தில் வந்து பட்டினி கிடப்பதாலுண்டாகிய பாபமானது ஸத்யம், யாகாதிகளாலுண்டாகும் தர்மம், கிணறு வெட்டுவதால் ஏற்படும் தர்ம முதலியவற்றை நாசஞ்செய்வதோடு புத்திரர், பசு, ஆயுள் முதலியவற்றையும் அழித்துவிடும். ஆதலால் நீர் விரைவிற் சென்று அந்த அதிதியைப் பூஜிப்பீராக என்றனர்.

இவ்வுரைக்கேட்ட யமதருமன் மிகவும் பரபரப்புடன் பயமுற்றுக் கையில் பூரண கும்பத்தை ஏந்திக்கொண்டு நசிகேதஸ் இருக்குமிடம் வந்து அவனைப்பார்த்து ஹே நசிகேதஸ்ஸே! நீர் அக்கினி ஸ்வரூபியாயும், பிர்ம்மதேஜஸுடன் கூடினவராயும், எல்லோராலும் வணங்கத்தக்கவராயும் விளங்குகின்றீர்; நீவிர் என்னுடைய க்ருஹத்தையடைந்து மூன்று தினங்கள்வரை ஒன்றும் புஜிக்காதிருக்கிறீர்; ஆதலால் நான உம்மை உபேக்ஷைசெய்தவனுகிவிட்டேன்; நான் உம்மை நமஸ்கரிக்கின்றேன்; எனக்கு மங்களமுண்டாகும்படி அநுக்ரஹிப்பீர்; உமக்கு ஒன்றிலும் விருப்பமில்லாமற்போனுலும் என்னுடைய நன்மையை உத்தேசித்தாவது என்னுடைய க்ருஹத்தில் மூன்று தினம் உபவாஸமிருந்ததற்கு மூன்று வரங்கள் பெற்றுக்கொள்வீர் என்றனன்.

அப்பொழுது நசிகேதஸ் யமதருமனைப் பார்த்து நீர் கட்டளையிட்டபடி உம்மிடத்தில் மூன்றுவரங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.— என்னுடைய தகப்பனுர் எனது கெதியாதாயிற்றோ என்று எப்

பொழுதும் விசனமுடையவராயிருப்பார்; இனி, அவர் அவ்வாறு விசனமடையாமலிருப்பதோடு அவர் முன்பு என்னிடத்தில் எவ்வளவு விசுவாசமுடையவராயிருந்தனரோ அதுபோல மறுபடியும் என்னிடத்தில் அன்புடையவராயிருத்தல்வேண்டும். இதை நான் முதல்வரமாகக் கேட்கிறேனென்றான்.

இதைக்கேட்ட யமதருமன் நசிகேதஸ்ஸை நோக்கி உத்தாலக மஹருஷியின் புதல்வராயும் அருணகோத்திரத்தில் பிறந்தவராயுமிருக்கின்ற உம்முடைய தகப்பனரான வாஜச்ரவஸ் என்பவர் என்னால் அநுக்ரஹிக்கப்பட்டவராய் உம்மிடத்திற் கொண்டுள்ள கோபத்தை யகற்றிச் சுகமாக நித்திரை செய்யப்போகின்றார்; உம்மையுஞ் சந்தோஷத்துடன் பார்க்கப்போகின்றார்; இதுநிற்க, மேலும் இரண்டாவது வரத்தைக் கேட்பீர்.

நசிகேதஸ்ஸு யமதருமனை நோக்கி நீர் * ஸ்வர்க்கலோகத்தில் வசித்துக்கொண்டு சிறிதேனும் பயமுறுகின்றீரில்லை; கிழத்தனத்தினின்றும் அஞ்சுகின்றீரில்லை; பசி, தாக முதலியவற்றால் துக்கமடைகின்றீரில்லை; இவ்வாறு நீர் இருப்பதற்குக் காரணமாயுள்ள புராணங்களால் பிரஸித்திபெற்ற அக்னி விசேஷத்தை நீர் அறிந்திருத்தல்வேண்டும். யானும் அந்த ஸ்வர்க்கமாகிய மோக்ஷத்தையடைய விருப்பமுடையவனாயிருப்பதால் அந்த அக்னி விசேஷத்தை உபதேசித்தருளவேண்டும். இதுவே யான் விரும்பும் இரண்டாவது வரமாகும் என்றான்.

இதைக்கேட்ட தருமன் மகிழ்ச்சியுற்று நசிகேதஸ்ஸே! உன் பொருட்டு மோக்ஷத்திற்குக் காரணமாகிய அந்த அக்னியை உபதேசிக்கிறேன்; கேட்பாயாக.— நீ அந்த அக்னியை அறிந்துகொண்டு “தத்விஷ்ணோ: பரமம்பதம்” “நவாஸுதேவாத் பரமஸ்தி நவாஸுதேவாத் பரமஸ்தி” எது எல்லாவற்றைக்காட்டிலும் மேன்மைபொருந்

* இங்கு ஸ்வர்க்கமென்றது மோக்ஷத்தை. யமன் முமுக்ஷுவாய் (மோக்ஷத்தில் இச்சையுடையவனாய்) மோக்ஷோபாயம் கைபுகுந்தவனாய் நிச்சயமாய் மோக்ஷமடைதற்குரியவனாயிருக்கின்றானென்ற துணிபுபற்றி இங்கு யமனை ஸ்வர்க்கத்திலிருக்கின்றானென்று நசிகேதஸ் கூறினான்.

தியது யாதோ, எதை யடைந்தால் திரும்புவதில்லையோ அந்த மோக்ஷத்தைபடைவாய். அந்த அழிவில்லாத லோகத்தை யடைவதற்குச் சாதனமான அந்த அக்னியானது மிகவும் ரஹஸ்யமான விடத்தில் வைக்கப்பெற்றுளதென்றுரைத்து லோகத்திற்கு ஆதியாயிருக்கின்ற அந்த அக்னியை எவ்வாறாக உபதேசிக்கவேண்டுமோ அம்முறைப்படி உபதேசித்தான். நசிகேதஸ் இந்த உபதேசத்தைத் தாழ்மையுடனிருந்து கேட்டான். பின்பு தருமராஜன், நசிகேதஸ் இவ்வுபதேசத்தைக்கேட்டு மனத்தில் தரித்திருக்கிறானா? என்று பரீக்ஷிப்பதற்கு அவனை நோக்கி 'நசிகேதஸ்ஸே! இப்பொழுது நான் கூறியதைக் கூறுவாய்' என்று வினவினன். நசிகேதஸ் சிறிதும் தவறாது உபதேசித்த விஷயத்தைக் கூறினன். தருமராஜன் மகிழ்ச்சியடைந்து, நசிகேதஸ்ஸே! நான் உனக்கு மூன்றுவரங்கள் கொடுப்பதாகச் சொன்னதைத் தவிர மற்றொரு வரமும் தருகிறேன். இந்த அக்னியானது இனி உன் பெயராலே வழங்கப்படட்டும்; நான் உகப்பின் மிகுதியால் கொடுக்கிற இந்த விசித்ரமான ரத்னமாலையையும் பெற்றுக்கொள்வாய்; என்று கூறினன்.

பின்னரும் யமதருமன் இந்த அக்னியைப் புகழத்தொடங்கினன்.— இந்த * திரிநசிகேதம் என்ற அக்னி மந்த்ரத்தை அத்யயனஞ் செய்தவன் எவனோ அவனே யஜனம், அத்யயனம், தானம் என்ற மூன்று கர்மாக்களைச் செய்வதற்கு யோக்யமுடையவனாகின்றான். பரமபுருஷனது உபாசனையால் ஒரு சம்பந்த விசேஷத்தை யடைந்து தன்னுடைய உத்பத்தி நாசங்களை நிராகரிக்கிறான். இந்த நாசிகேதம் என்கிற மந்திரத்தைக் குருவின் உபதேசத்தாலோ அல்லது சாஸ்திரஞானத்தாலோ அறிந்து அநுஸந்திக்கின்றவன் ராக, த்வேஷ முதலியவைகளை அவன் சரீரநாசத்திற்கு முன்பே (ஜீவதசையிலே) புறக்கடித்து ஸ்வர்க்கலோகத்தில் ஸுகிப்பான்.

தொடரும்.

---

* "அயம்வாவயஃ பவதே" என்று தொடங்கி தைத்திரியப் பிராம்மணத்தில் மூன்று அநுவாகங்களால் நாசிகேதாக்னியின் ஸ்வரூபம், லக்ஷணம் ப்ரயோஜனம் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பின்னர் சந்தர்ப்பமறிந்து தெரிவிக்கலாகும்.

ஸ்ரீ:

பக்தி நிரூபணம்.

[இது ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

பக்தி விஷயத்தில் நிரூபணீயங்களான சில விஷயங்கள் நிரூபிக்கப்படுகின்றன. பக்தியாவது — "ஸ்நேஹ பூர்வமநுத்⁴யாநம் ப⁴க்திரித்யபி⁴தீ⁴யதே" "ஸ்நேஹ பூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே" என்கிற ப்ரமாணத்தின்படி ப்ரீதிரூபமான நிரந்தர ஸ்மிருதிரூபமாயிருந்துள்ள ஜ்ஞானவிசேஷம். இந்த பக்தி, ஸ்ம்ருதிரூபையாகையாலே இந்த ஸ்ம்ருதிக்கு ஹேதுவாயிருந்துள்ள "அநுவித்³ய விஜாநாதி, விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" "அநுவித்ய விஜாநாதி விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத" என்கிற ப்ரமாணத்தின்படி வேதவேதோப ப்ருஹ்மணரூபமான சாஸ்த்ரங்களாலுண்டாவதான யதாவஸ்திதார்த்த விஷயக சாப்தபோதாத்மக ஜ்ஞானவிசேஷம். இந்த ஜ்ஞானவிசேஷத்துக்கு ஹேது "ஶுத்³த⁴பா⁴வம் க³தோ ப⁴க்த்யா ஶாஸ்த்ராத்³வேத்³மி ஜநார்த³நம், ப⁴க்த்யா மாமபி⁴ஜாநாதி" "சுத்தபாவம் கதோ பக்த்யா சாஸ்த்ராத்வேத்மி ஜநார்த்தநம், பக்த்யாமாமபிஜாநாதி" என்கிற ப்ரமாணத்தின்படியும் ஆஸ்திக்யாதிரேகக்ருதமான விசுவாஸாத்மக ஜ்ஞானவிசேஷம்.

இந்த ஜ்ஞாநம் பக்தியினுடைய ப்ரதம பர்வரூபமாகையாலே இதுவும் பக்தி யென்றே வ்யவஹரிக்கப்படும். இதற்கு ஹேதுபலாபிஸந்தியில்லாமல் கேவல பகவதாராதநரூப கர்மாநுஷ்டானத்தால் ரஜஸ்தமஸ்ஸுக்கள் நிவ்ருத்தங்களாகி, உண்டாகிற ஸத்வகுணத்தினுடைய அபிவ்ருத்தி.

இப்படியிருந்துள்ள ஸத்வவ்ருத்தி சில அதிகாரிகளுக்கு பகவதநுக்ரஹ விசேஷத்தாலும், மஹதநுக்ரஹ விசேஷத்தாலும் ஏற்படும்.

அந்த அநுக்ரஹ விசேஷங்களுக்குக் காரணம் யாத்ருச்சிக ஸுக்ருதம் முதலானவையுமாகலாம்; அங்ஙனன்றிக்கே அவை நிர்ஹேதுகங்களாயுமிருக்கலாம். இதற்கு நிதர்சனம்.— உத்தான பாதனுடைய குமாரனுகிய அநுபநீதனுன த்ருவனுக்கு நாரத ருடைய அநுக்ரஹ பூர்வகமான உபதேசத்தால் ஏற்பட்டதும், ஆழ்வார்களுக்கு "மயர்வறமதிநலமருளினன்" என்கிறபடியே ஈசு வரனுடைய நிர்ஹேதுக அநுக்ரஹ விசேஷமும் இந்த பக்திஸாதந பூதையாயும், பலபூதையாயும், ஸித்தோபாயவரணரூபையான ப்ர பத்திக்குக் காரணபூதையாயுமிருக்கும். அவைகளில் ஸாதநபூதை யான பக்தியானது இதனுல் ஆராதிக்கப்பட்ட ஈசுவரனுடைய ப்ரீதி விசேஷத்வாரா மோக்ஷத்துக்குக் காரணமாயிருக்கும்.

இந்த பக்தி த்ரைவர்ண்யாதிகாரையாயும் ஸர்வாதிகாரையாயு மிருக்கும். த்ரைவர்ணிகர்களுடைய பக்திக்குக் காரணம் உபநயன பூர்வகம் வேதாத்யயநம் முன்னுக உபப்ரஹ்மண ஜந்யமான வாக் யார்த்த ஜ்ஞானவிசேஷம். ஸர்வாதிகாரையான பக்திக்குக் காரணம் கீழ் நிரூபித்தபடி ஒளபதேசிகமான ஜ்ஞானவிசேஷம். இந்த விஷ யம் சுருதப்ரகாசிகையில் லகுஸித்தாந்த ப்ரகரணத்தில் "ஶ்ரோ தவ்யோ மந்தவ்ய:" "சுரோதவ்யோ மந்தவ்ய:" என்கிற இடத்தில் விதிவிஷயமான ஒளபதேசிகார்த்த சிரவணத்தை ப்ரதிபாதிக்கிற தென்றும், இது ராகப்ராப்தமன்றென்றும் ஆக்ஷேபித்துக்கொண்டு ஒளபதேசிகார்த்த சிரவணவிதி மேலே நிரூபிக்கப்படுகிறபடியால் இவ்விடத்தில் ராக ப்ராப்தமான சிரவணத்தையே சொல்லுகிற தென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒளபதேசிகார்த்த சிரவணவிதியானது சாரீரகமீமாம்ஸா த்ருதீயாத்யாய சதுர்த்த பாதத்தில், "ஸஹகார்யந்தர விதி:" "ஸஹகார்யந்தர விதி:" என்கிற ஸூத்ரத்தில் பாண்டித்ய சப்தார்த் தம் ஒளபதேசிகார்த்த ஜ்ஞாநமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியே ரங்கராமாநுஜ ஜீயர் ஸ்வாமியால், "ஸஹகார்யந்தர விதி:" "ஸஹகார்யந்தரவிதி:" என்கிற ஸூத்ரவ்யாக்யாநாவ ஸரத்தில் (தம்முடைய சாரீரக சாஸ்திரார்த்த தீபிகையில்) நிரூபிக்

கப்பட்டிருக்கிறது. இன்னும் ரங்கராமாநுஜஜீயர் ஸ்வாமி ஸாதித்தருளிய சாந்தோக்கியபாஷ்யத்தில் ஸம்வர்க்க வித்யாப்ரகரணத்தில் பாஞ்சராத்ரஸித்தமான தாந்த்ரிக மந்த்ராங்கமான உபாஸநத்தில் த்ரைவர்ணிகபிந்நர்களுக்கும் அதிகாரமுண்டென்றும் நாரதர் பூர்வ ஜன்மாவில சூத்ரராயிருந்து ருஷிகளிடத்தில் நின்றும் பிரஹ்ம வித்யைப்பெற்றாரென்று நிரூபித்திருக்கிறார். கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில், "ஸ்த்ரியோ வைஶ்யா: ததா ஶூத்ரா:" "ஸ்த்ரியோ வைச்யா: ததாசூத்ரா:" என்கிற சுலோக வ்யாக்கியாநாவஸரத்திலும், தத்வமுக்தாகலாபத்திலும், தத்தத்வர்ணாச்ரமோசித தர்மாங்ககமான உபாஸநம் ஸர்வாதிகாரமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் வைதிகமான உபாஸநம் அதிகிருதாதிகாரமாயும், உபதேசலப்த உபாஸநம் ஸர்வாதிகாரமாயுமிருக்கும். இப்படி ஸாதந பக்தி நிரூபிக்கப்பட்டது.

இனி, பலரூபையான பக்தி நிரூபிக்கப்படுகிறது. அதாவது — ஸித்தோபாயவரணரூபையான சரணாகதி நிஷ்டனான அதிகாரிக்கு அந்த சரணாகதிபலமாய் நித்யவிபூதியில் ஏற்படுகிற பரிபூர்ணாநுபவத்துக்கு ஸாதநரூபையாய் போஜனத்துக்கு க்ஷுத்துப்போலே அவசியபாவிநியாய், "ஸம்வஸ ஸாக்ஷிதேவி வ்யவஹ, ஸநாதந ஹித வஸ்ஷ்க்ய ..." "பரவத்பக்திமபி ப்ரயச்சமே, ஸ்தாநத்ரயோசித பரபக்தியுக்தம் மாம்குருஷ்வ" என்கிற ப்ரமாணத்தின்படி ப்ரார்த்திக்கப்படுமதாய் சரீராவஸாந காலத்தில் வரக்கடவதான அபிநிவேசரூபையாயிருந்துள்ள பக்தி.

இந்த பக்தியாகிற ஜ்ஞானவிசேஷம் ஸ்மிருதிஸந்ததிரூபமாயிருந்தாலும் ஸித்தாந்தத்தில் இச்சை ஜ்ஞானவிசேஷமாயிருப்பதால் நிரந்தர ஸ்மிருதிரூபமான ஜ்ஞானமும் இச்சாவஸ்தையை பஜித்து அபிநிவேசரூபையாக ஆகிறது.

இதனுடைய பர்வபேதங்கள் பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளாம். இவற்றுள் பரபக்தியாவது.— ஸாக்ஷாத்காராத்மக ஜ்ஞான விசேஷம். பரஜ்ஞானமாவது.— விசததமமாந அநுபவவிசேஷம். பரமபக்தியாவது.— அநுபவம் கிடையாவிடில் தரியாத அவஸ்தை.

இப்படியிருந்துள்ள பக்தி ஆழ்வார்களுக்குப் பகவத்கிருபாவிசேஷத்தாலே "அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண்அன்புசெய்வித்து" என்கிறபடியே அஜ்ஞானவித்தையாய் அதிசயிதப்ரேமரூபையாய் இந்த ஜ்ஞானவிசேஷத்தாலுண்டாகிற பகவதநுபவ அலாபத்தில் ஆற்றாமையாலும் ஸம்ஸாரத்திலுடைய க்ரௌர்யாநுஸந்தானத்தாலும் விளம்பம் ஸஹியாமையேற்பட்டு அஸக்ருதப்ரபத்தியையும் ஸ்வப்ருவ்ருத்திரூபமாயும் ஸ்வரூபவிருத்தமாயுமுள்ள மடலூருகையையும் விளைவிக்கும்

தொடரும்.

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

(123-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஆராதனமாவது— * முகோல்லாஸ ஜநக வியாபார விசேஷமாம். இந்த வியாபாரவிசேஷஸம்பந்தம் ஆராதனை செய்கின்ற ஜீவனிடத்தில் பிரிதியோகித்வ (விசேஷணத்வ) ஸம்பந்தத்தால் இருக்கிறது. இந்த ஆராதனத்தை ஏற்றுக்கொள்வது விக்ரஹரூபமானவஸ்துவே. இப்பொழுது ஆராதனம் அநுயோகித்வ (விசேஷ்யத்வ) சம்பந்தத்தால் விக்ரஹரூபமான வஸ்துவினிடத்திலிருக்கக் காண்கின்றோமேயன்றி எம்பெருமானிடத்திலிருப்பதாகக் காண்கின்றோமில்லை. ஆதலால் ஆராதனத்தால் ஈசுவரனுக்குப் பிரீதியுண்டாகுமாறெங்ஙனமென்னில்; இங்கே ஆராதன ஸம்பந்தமென்பதற்கு ஆராதனப் பிரயோஜன ஸம்பந்தமென்று பொருள் கொள்ளத்தக்கது. முகோல்லாஸ ஜநக வியாபாரவிசேஷம் ஆராதனமானால் ஈசுவர முகோல்லாஸம் ஆராதனத்தின் பிரயோஜனமாகும். ஆதலால் ஆராதனப் பிரயோஜனமான ஈசுவர முகோல்லாஸமுண்டானதுபற்றி ஆராதன ஸம்பந்தம் எம்பெருமானுக்குண்டென்று சொல்லத்தட்டில்லை.

---

* முகோல்லாஸ ஜநக வியாபாரவிசேஷமாவது.— ஈசுவரனுக்கு முகக்களிப்பையுண்டுபண்ணுவதற்குக் காரணமாயுள்ள தொழில் வேறுபாடு.

முகோல்லாஸ ஜநக வியாபாரம், ஆராதனை செய்கின்றவனிடத்திலும், முகோல்லாஸம் எம்பெருமானிடத்திலும் உண்டாகிறதென்றால் † காரணகாரியங்கள் ஒரு நிலைக்களத்திலிருத்தல்வேண்டுமென்ற நியமத்திற்குக் குறைவுண்டன்றோவென்னில்; அந்தக் குறைவுண்டாகாது. எவ்வாறென்றால் எம்பெருமானை ஸ்தோத்திரஞ்செய்தால் அவனுக்குப் பிரீதியுண்டாகிறதென்று சொல்லுகிறோம். இவ்விஷயத்தை ஆராயுமிடத்தில் ஸ்தோத்திரம், செய்பவனிடத்திலும் அதனாலுண்டாகிய பிரீதி எம்பெருமானிடத்திலுமிருப்பதாகத் தோற்றுகிறது. இங்கும் காரணகாரியங்கள் வெவ்வேறிடத்திலிருப்பதாக விளங்குகின்றதினால் இதற்கு வேறுவகையாகப் பொருள் கொள்ளவேண்டும். அது வருமாறு.—

ஒருவன் செய்கிற ஸ்தோத்திரத்தை எம்பெருமான் கேட்டு 'இவன் நம் விஷயத்தில் மிகவும் ஈடுபட்டு இவ்வாறு ஸ்துதிக்கின்றானே' என்று அவனுக்கு ஓர் ஜ்ஞாநம் உண்டாகும். அந்த ஜ்ஞாநத்தால் எம்பெருமானுக்குப் பிரீதி விளையும். ஆகவே எம்பெருனுக்குப் பிரீதி விளைகைக்கு நேரே காரணமாயிருப்பது அவனுக்குண்டாகிய ஜ்ஞாநமாம். அந்த ஜ்ஞாநத்திற்கு இவன் செய்த ஸ்தோத்திரம் காரணமாகும். இவன் செய்த ஸ்தோத்திரம் நேரே எம்பெருமானுடைய பிரீதியை விளைப்பதற்குக் காரணமாவதில்லை. அதுபோல ஒருவன், முகோல்லாஸ ஜநக வியாபாரமாகிய ஆராதனத்தைச் செய்யக்கண்ட எம்பெருமான் 'நம் விஷயத்தில் மிகவும் ஈடுபாடுற்று இங்ஙனம் ஆராதனை செய்கின்றானே' என்று அவனுக்கு ஆராதன விஷயமாக ஜ்ஞாநமுண்டாகும். அந்த ஜ்ஞாநத்தால் அவனுக்குப் பிரீதி விளையும். ஆகவே பிரீதி விளைகைக்கு இவன் செய்யும் ஆராதனம் நேரே காரணமாவதில்லை. பிரீதிக்கு நேரே காரணமாயிருப்பது ஈசுவரனுக்குண்டாகிய ஜ்ஞாநமாம். அந்த ஜ்ஞாநத்திற்கு இவனது ஆராதனம் காரணமாகும். ஆகையால் பிரீதிக்குப் பூர்வ

---

† படம் (வஸ்திரம்) காரியம் என்பதில் காரியமாகிய படமும் அதற்குக் காரணமாகிய நூலின் ஸம்யோகமும், ஒரு நிலைக்களத்திலிருக்கக் காண்கின்றோமாதலால் காரணகாரியங்கள் ஓரிடத்திலிருக்கவேண்டுமென்பது நியமமாயிற்று.

விர்த்தியாயிருக்கின்ற ஜ்ஞாநம் எம்பெருமானிடத்திலே இருக்கின்ற திஞல் காரணகாரியங்கள் ஒரு நிலைக்களத்திலிருக்கின்றமை யறியலாம். எவ்வாறு கூறினும் பிரீதிக்குப் பூர்வவிர்த்தியாயிருக்கின்ற ஜ்ஞாநம் எம்பெருமானிடத்திலிருந்தாலும், முகோல்லாஸ ஜனக வியாபாரம் ஜீவனிடத்தில் தானேயிருக்கிறது. அப்படியாம்போது இங்கும் காரணகாரியங்கள் ஓரிடத்திலிருக்கவில்லையே யென்னில்; ஸ்வாநுயோகித்வாச்ரயாதிஷ்டாநத்வ ஸம்பந்தத்தால் இவனிடத்தி லுள்ள முகோல்லாஸ ஜனகமான வியாபாரமும், எம்பெருமானிடத்திலுள்ள பிரீதியும் ஒரு நிலைக்களத்திலிருக்கின்றமை யறியலாம். இங்கே ஸ்வ என்ற சொல் ஆராதனையைக் குறிக்கும். அதன் அநுயோகிதாச்ரயம் பிம்பம். அந்த பிம்பத்தை அதிஷ்டித்திருப்பவன் எம்பெருமானென்று கொள்க.

இவ்வாறன்றி ஆராதனத்தின் பிரயோஜனம் பிரீதியாகவும் சொல்லலாம். முன்பு முகோல்லாஸத்தை ஆராதனத்தின் பிரயோஜனமாகக்கூறியது பிரீதியின் வலிமையைப்பற்றியதாகும். முகோல்லாஸமாவது — உருவத்தைக்காட்டுகின்ற கண்ணாடிபோல மனத்திலுண்டாகின்ற மகிழ்ச்சியைக் கண்கூடாகத் தெரிவிக்கும் முகச்செழிப்பாம். அர்ச்சாபிம்பத்தில் இந்த முகக்குறி பிரத்யக்ஷமாகத் தோன்றுவிட்டாலும் அர்ச்சாவிக்ரஹத்தில் ஈசுவரன் அதிஷ்டித்திருக்கிறுனதலால் அவனுக்குப்பிரீதியுண்டாகுமென்பதில் யாதொரு குறையில்லை இது நிற்க;

எம்பெருமான் *அவாப்த ஸமஸ்த காமனுயிருக்கின்றுனதலால் அவனுக்கு இவன் செய்கிற ஆராதனத்திஞல் பிரீதியுண்டாகுமென்பது எவ்வாறு கூடுமென்னில்; இந்தக் கேள்வி அர்ச்சாவிஷயத்தில் மாத்திரம் வரக்கூடியதில்லை. அதிருஷ்டபலத்தை நினைத்து அநுஷ்டிக்கக்கூடிய எல்லாவற்றிலும் இந்தக் கேள்வி யுண்டாகும். அவ்விடங்கட்கு என்ன சமாதானமுண்டோ அதுவே இதற்கும் ஸமாதானமாகும். நிற்க;

---

* அவாப்த சமஸ்த காமன் —ஸகலபோக்ய வஸ்துக்களிலும் பரிபூரணனுயிருப்பவன்.

அர்ச்சாவிஷயத்தில் விசேஷ ப்ரதிபத்தியுண்டாகுமாகில் ஸர்வேசுவரன் ஸர்வ வியாபகனென்கிற வியாபகவத்வ ப்ரதிபத்திக்கு விரோதமன்றோ வென்னில்; விரோதவராது. எவ்வாறெனின்; எம்பெருமான் கல்யாணகுண பரிபூரணனாய் எங்கும் நிறைந்திருக்கின்றானென்ற அநுஸந்தானத்திற்கும், அர்ச்சாபிம்பத்தில் அக்கல்யாண குணங்களை † ஆவிஷ்கரிக்கின்றானென்ற அநுஸந்தானத்திற்கும் யாதொரு விரோதமும் காணாமையாலே விரோதமில்லை.

இஃதொருபுறமிருக்க; மற்றோர் ஆச்சர்யந் தோற்றுகிறது. அஃதாவது.— இப்பொழுது அர்ச்சாராதனத்தைத் தூஷிக்கப் புகுந்தவர்களுங்கூட காயிகமான ஸாமாந்ய ஸர்வ கர்மங்களும், பகவானை உத்தேசித்து செய்யப்பட்ட விசேஷ கர்மங்களும் பகவதர்ப்பணத்தாலே அவனுக்குப் பிரீதி உண்டாக்குகிறதென்கிற திருடமான விசுவாசம் மேலிட்டு ஏகாந்த ஸ்தலத்தைப்பற்றித் தியானார்ச்சநங்களுக்கு * ஆலபம்பநமானதொரு விக்ரஹமில்லாமலே கண்ணை மூடுவதும் திறப்பதும் ஸ்தோத்திரங்களைப் படிப்பதும் படிப்பிப்பதும் ஆநந்தக்கண்ணீர்விட்டு அழுவதுமான செயலைச் செய்கிறார்கள். இப்படி இவர்கள் திருடமான நம்பிக்கைகளுக்கு விஷயமாயுள்ள காயிகமான கர்மாக்களில் இந்த அர்ச்சாராதனரூப கர்மாவும் ஒன்றாயிருக்க இந்த அர்ச்சாசராதனத்தில் மாத்திரம் மிகவும் த்வேஷமுண்டாயிருப்பது ஆச்சர்யப்படத்தக்கதே. இது, மஹத்தானதொரு பாபபரீபாகமென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறதன்றோ!

தொடரும்.

---

† ஆவிஷ்கரித்தல்—பிரகாசிப்பித்தல்.

* ஆலம்பநம்—ஆதாரம்.

185

ஸ்ரீ:

உடையவர்

சாரதாபீடத்திற் கெழுந்தருளியது.

உடையவர் திக்விஜயஞ் செய்துகொண்டு வருகிற காலத்தில் காச்மீரதேசத்திற் கெழுந்தருளினர். இந்தக் காச்மீரதேசத்திற்குச் சில காததூரத்திற்கப்பாலிருக்கும் மாயாபுரியான ஹரித்துவாரத்தி லிருக்கின்ற மாயாவாதிகள் 'இராமாநுஜர் நம் சமயத்தைப் பங்கப் படுத்தி வருகிறார்; இவரை எவ்வாறாவது ஒழித்துவிடவேண்டும்' என்று தம் மந்திர சக்தியால் உடையவரைக் கொல்லுமாறு சில பூதங்களை ஏவிவிட்டனர். பின்பு அஷ்டாக்ஷர மந்த்ர நிஷ்டரான * மாதவன் பூதமான † பூதபுரிநாதனும் அதையறிந்து தம் சக்தி யால் அப்பூதங்கள் அழிந்துபோகும்படி செய்தார்.

இதையறிந்த மாயாவாதிகள் எல்லோரும் ஒருங்குகூடி மத வாதஞ் செய்வதற்காக உடையவரைக் கிட்டி எதிர்த்தனர். அப் பொழுது தக்க பிரமாணங்களால் அவர்கள் சொல்வதையெல்லாங் கண்டித்து விசிஷ்டாத்வைதமே வேதாந்தசித்தமான அர்த்தம் என்று ஸ்தாபித்தார்.

இவ்வாறு மாயாவாதியரை வெற்றிகொண்ட உடையவரை காச்மீரதேசாதிபதியான ராஜா பார்த்து, 'தேவரீர் ஸ்தாபித்தருளிய விசிஷ்டாத்வைதபக்ஷத்திற்குப் பிரமாணம் ஏது? என்று கேட்டான். உடையவர் அரசனைப்பார்த்து வேதவியாசபகவானால் இயற்றப் பெற்ற வேதாந்தஸூத்ரத்திற்கு வியாக்யானமான போதாயன விருத்தியை அநுசரித்து அதன் சுருக்கமாகப் பண்ணின அங்க,

---

* மாதவன் பூதம்—பெரியபிராட்டியாருக்கு நாயகனாகிய எம்பெருமா னுடைய அநுஸந்தானத்தால் நிலைபெற்றிருப்பவர்.

† பூதபுரிநாதன்—பூதபுரியாகிய ஸ்ரீபெரும்புதூரில் அவதரித்த உடை யவர்.

த்ரமிட, குஹதேவர் முதலானவர்களின் பாஷ்யமே இதற்குப் பிரமாணமாகும் என்றார். ராஜா நடுநிலைமையுடையவனாகையால் உடையவர் அருளியபடி அங்க, த்ரமிட, குஹதேவர் முதலானவர்களின் பாஷ்யங்களில் இருக்கின்றதா என்று ஆராய்வதற்கு வித்வான்களையும் அழைத்துக்கொண்டு சாரதாபீடத்திலிருக்கிற * ஸ்ரீகோசசாலையில் பிரவேசித்து அந்தக் கிரந்தங்களைக் கொணர்ந்து வித்வான்களுக்கு மத்தியிலே பொதுநோக்குடன் பார்க்கும்போது அதில் எதிராஜரருளிய விசிஷ்டாத்வைதமே எங்கும் பொருத்தமாக விளங்குகின்றமையைக்கண்டு ராஜா மிகவும் மகிழ்ச்சியுடையவனாய் உடையவருடைய திருவடிகளில் அன்புடன் தண்டனிட்டுத் 'தேவரீருக்கொப்பானவர்கள் ஒருதேசத்திலுமில்லை' என்றுரைத்தான். அங்குள்ள சங்கரமதச் சார்பினரான வித்வான்களனைவரும் வாதசாயுத்தத்தில் சங்கராதியர் பட்டபாடு பட்டனர்.

இதுநிற்க; வேதவியாசபகவான் அருளிச்செய்த பிர்ம்ம ஸூத்திரத்தின் பொருள் விளங்க போதாயனர் இருபது லக்ஷம் க்ரந்தமாக ஓர் விர்த்தி அருளிச்செய்தார். இந்த நூல் போதாயன விர்த்தியென்று வழங்கப்படும். இது மிகவும் விஸ்தாரமாகவிருப்பதால் தேவர்களுடைய திவ்ய ஜ்ஞானத்திற்கு விளங்கக்கூடியதாயிருக்கும். ஏனையோர்களுக்கு இதன் பொருளுணர்தல் அருமையாகுமென்றறிந்த பின்புள்ளார்கள் மனுஷ்யர்கள் பயில்வதற்கு யோக்யமாகும்படி அதை இருபத்தையாயிரங் கிரந்தமாக இயற்றினார்கள். இந்தக் கிரந்தம் இப்புஸ்தகசாலையிலிருக்கிறது; இதை ஒருமுறை அநுஸந்திக்கும்படி தரவேண்டுமென்று எதிராஜர் அரசனைநோக்கிக் கேட்டனர். அப்பொழுது அங்குள்ள வித்வான்கள் பொறாமைகொண்டு இந்தக் கிரந்தத்தை இவரிடங் கொடுக்கலாகாதென்று தடுத்தார்கள். அதுசமயம் ராமாநுஜர் இந்தக் கிரந்தத்தை ஒருமுறை பார்த்துவிட்டு உடனே கொடுத்துவிடுகிறேனென்றுரைத்தார். அவர்கள் இவருடைய திவ்ய ஜ்ஞானத்தின் பெருமையறியாது 'பொருளறிதற்கு மிகவும் அருமையான இந்த நூலை இவர் ஒருமுறை பார்ப்பதால் யாதறியக்கூடும்?' என்ற நோக்கத்தோடு கொடுத்தனர்.

* ஸ்ரீகோசசாலை—புஸ்தகசாலை.

பின்னர் இராமாநுஜரும் அதன் சீரிய அர்த்தங்களையெல்லாம் தம் திருவுள்ளத்திலே வைத்து அந்த நூலை மறுபடியும் அவர்களிடத்தில் கொடுத்துவிட்டார். அதன்பிறகு மகிழ்ச்சியுடன் போதாயனரருளிய முறையினைத் தம் மனத்தில் பாவித்துக்கொண்டு அதற்கிணங்க 'சரஸ்வதி பூஜித்தாதரிக்கும்படி பாஷ்யஞ்செய்யக் கடவேன்' என்று அருளிச்செய்தார். பிறகு கூரத்தாழ்வானும் தாமுமாக முன்பு கடாக்ஷித்த க்ரந்தத்தின் பொருளை ஒருவருக்கொருவர் வினவி நன்காராய்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இராஜாவும் வித்வான்களும் உடையவரைப் பார்த்து முன்பு நீர் பிரமாணங்களால் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே சிறந்ததென்று நிர்ணயித்ததுபோலப் பிரத்யக்ஷத்தாலும் தெரிவிப்பதற்கு நீவிர் இயற்றிய ஸித்தாந்த க்ரந்தத்தைச் சாரதாதேவியின் கரத்திலே வைப்பீர்; அவள் ஆதரிப்பதையும் அநாதரிப்பதையும் பார்ப்போம்; என்றனர். உடையவரும் 'அப்படியே செய்கிறோம்' என்று ஒரு இராத்திரியிலே 'வேதாந்தஸாரம்' என்ற தாமியற்றிய நூலைத் தம் திருக்கையாலே எழுதி அரசன் கையில் கொடுத்தார். அரசன் அன்று சரஸ்வதி பூஜையைச் செவ்வனே நடப்பித்து வேதாந்தஸாரத்தை சரஸ்வதியின் கரத்திலே வைத்து கதவை மூடி முத்திரையிட்டுப் பொழுதுவிடிந்தபிறகு கபாடத்தைத் திறந்து பார்க்க அவள் கரத்திலே வைக்கப்பட்ட வேதாந்தஸாரம் அவள் சிரஸிலே சிரோபூஷணமாகவிருக்கக்கண்டு வேந்தனும் வித்வான்களும் ஆச்சர்யமுற்று எதிராஜரை ஸ்துதித்து மகிழ்வுற்றிருந்தார்கள்.

அப்பொழுது எதிராஜரும் சரஸ்வதி தேவியின் பக்கத்திலே நின்று எம்பெருமானுடைய நாபிகமலத்தைப் பிறப்பிடமாகவுடையவனாய் அதனால் உலகிலுள்ளவர்களைப்போல பிறவாதவனாய் அண்டநாயகனாயிருக்கின்ற பிர்ம்மாவின் தேவியாய் தேவமாதாவாயிருக்கின்ற நீ என்னுடைய நூலை ஆதரித்தனையே! "𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌶𑌾𑌰𑌦𑌾 𑌦𑍇𑌵𑌿 𑌕𑌾𑌶𑍍𑌮𑍀𑌰 𑌪𑍁𑌰𑌵𑌾𑌸𑌿𑌨𑌿, 𑌤𑍍𑌵𑌾𑌮𑌹𑌂 𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌯𑍇 𑌦𑍇𑌵𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌦𑌾𑌨𑌞𑍍𑌚 𑌦𑍇𑌹𑌿 𑌮𑍇" "ஸ்வஸ்த்யஸ்து சாரதாதேவீ காச்மீர புரவா

ஸிநீ, அவிக்நம் குருமே தேவீ வித்யார்தாநஞ்ச தேஹிமே” என்று தம் ஸ்வரூபத்துக்குப் பொருத்தமாயிருக்குப் சொற்களால் புகழ்ந்து,

நாம்பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்
தோம்பி யிருந்தெம்மை யோதுவித்து—வேம்பின்
பொருணீர்மை யாயினும் பொன்னுழி பாடென்னு
மருணீர்மை தந்த வருள்

என்றபடி எல்லா நன்மைகளுக்கும் அவள் அநுக்ரஹமே காரணமாகுமென் றருளிச்செய்தார்.

அப்பொழுது சாரதாதேவியானவள் அசரீரிணியாக உடையவரைப்பார்த்து முன்பு சங்கரன் “யஶாகவ்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ” “யதாகப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ” என்ற சுருதி வாக்யத்திற்கு விபரீதார்த்தஞ் சொன்னான்; நீர் இந்த வாக்யத்திற்கு எவ்வாறு பொருளுணர்ந்துள்ளீர் என்று வினவினாள். இராமாநுஜர் “கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸம்ம்ருஷ்டநாள ரவிகர விகஸித புண்டரீகதளாமலாயதேக்ஷண:” “கம்பீராம்பஸ்ஸ முத்பூத ஸம்ம்ருஷ்டநாளர விகரவிகஸித புண்டரீகதளா மலாயதேக்ஷண:” என்றபடி ஸ்ரீமந்நாராயணனுக்கு அப்போதலர்ந்த செந்தாமரைபோல் திருக்கண்களிருக்குமென் றருளிச்செய்தார். இதைக்கேட்ட சாஸ்வதி ஆநந்தமுற்று ‘என்னுடைய சிந்தையின் வியாகூலத்தை ஒழித்தவரே! நீரே பாஷ்யகாராவீர்’ என்றுரைத்தாள்.

அரசன் எதிராஜரது திவ்யசக்தியைக்கண்டு அவருடைய திருவடிகளை ஆசிரயித்து † சரஸ்வதி பண்டாரத்திலிருந்த அதிவிஸ்தாரமான விர்த்தி ஸங்க்ரஹமான சாஸ்திரத்தையெடுத்து உடையவரிடத்திற் கொடுத்தான். உடையவரும் அதனை உகப்புடன் பெற்றுக்கொண்டு அரசனை ஆசீர்வதித்து அவ்விடத்தினின்றும் திருவரங்கத்திற் கெழுந்தருளினார்.

---

† சரஸ்வதி பண்டாரம்—புஸ்தகாலயம்.